

'இந்தியா' கூட்டணியின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



'இந்தியா' கூட்டணியின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி. அவர்கள், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, எம்.எல்.ஏ. அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஐரோப்பாவில் நடைபெறும் Monoco energy boat challenge எனப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் போட்டியில் பங்கேற்பதற்காக தொடர்ந்து மூன்றாவது முறையாகத் தேர்வாகியுள்ள கோவையைச் சேர்ந்த தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நேற்று சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அப்போது, மாற்று எரிபொருள் சக்தியாக பேட்டரி மூலம் இயங்கும் படகை வடிவமைத்து போட்டியில் கலந்து கொள்ள உள்ளதாக கூறிய மாணவர்களின் முயற்சியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டியதோடு மட்டுமின்றி மாணவர்களின் புது முயற்சி வெல்லட்டும் என்றும் வாழ்த்தினார்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் – திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக வழக்கறிஞர் அணித் தலைவர் கே.செல்வராஜ் ஆகியோரின் மகன் எஸ்.கே.திலீபன் – ஆர்.ஜி.ஜனனி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் (18.6.2024) மாலை நடைபெற்றது. இவ்விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் எம்.சி, தெற்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வ தேச டென்னிஸ் போட்டிகளில் வெற்றிகளை குவித்து வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ப்ரித்வி சேகர் குறிஞ்சி இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆஸ்திரேலிய ஓபன் & ஸ்லோவேனியா ஓபன் டென்னிஸ் தொடர்களில் சாம்பியன் பட்டமும் – Polish Deaf Open Tennis போட்டியில் 3 ஆம் இடமும் வென்ற அவரை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தங்களது வெற்றிப் பயணம் தொடர நம் திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும் என்று பாராட்டினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாட்டைச் சேர்ந்த சர்வதேச ஸ்குவாஷ் வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பா, ஒன்றிய அரசின் பத்மஸ்ரீ விருதை பெற்றதை தொடர்ந்து நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஸ்குவாஷ் விளையாட்டில் தொடர் சாதனைகளை படைத்துவரும், சர்வதேச அரங்கில் தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை தேடித் தந்துவரும் அவரது வெற்றிப்பயணம் தொடர வாழ்த்தினார்.

### திருவல்லிக்கேணி – ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிகளில் – இன்று

# தயாநிதிமாறன் எம்.பி., வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## வீதி, வீதியாகச் சென்று மக்களுடன் சந்திப்பு!

சென்னை, ஜுன் 20-

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக்குழுத் தலைவருமான நே.சிற்றரசு ஆகியோர் சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி மற்றும் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிகளில் வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கின்றனர்.

அதன் விவரம் பின்வருமாறு :-

திருவல்லிக்கேணி பகுதி

20.6.2024 - வியாழக்கிழமை - மாலை 4.30 மணி

துவங்கும் இடம் : அயோத்தி குப்பம், வி.ஆர். பிள்ளை தெரு, வெங்கடாசலம் தெரு, சிங்கராச்சாரியார் தெரு, பி.வி.நாயக்கர் தெரு, தேவராஜ் தெரு, மல்லன் பொன்னப்ப தெரு, ஷேக் தாவூத் தெரு, பெசண்ட் சாலை, கஜபதி லாலா முதல் தெரு, கந்தப்ப தெரு, இருசப்பன் தெரு, முத்தையா தோட்ட தெரு, பெரியமலையப்பன் தெரு, வி.எம்.தெரு, ராமாராவ் கார்டன், சைவ முத்தையா தெரு 135, வழியாக வி.எம். தெரு பெரியார் சிலை அருகே நிறைவு பெறுகிறது.

அதனைத் தொடர்ந்து

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி

20.6.2024 - வியாழக்கிழமை - மாலை 6.30 மணி

110அ வட்டம்.

காமராஜபுரம் மெயின் ரோடு, ராஜாஜி 2வது தெரு, புஷ்பா நகர் பிரதான சாலை, ராஜாஜி 3வது தெரு, புஷ்பா நகர் 1வது தெரு, டேங்க் பண்ட் சாலை, செங்கேணி அம்மன் கோவில் தெரு, டேங்க் பண்ட் மெயின் ரோடு.

110வது வட்டம்

கோத்தரி சாலை, ஜெயலட்சுமிபுரம் 1வது தெரு, ஜெயலட்சுமிபுரம் பிரதான சாலை, சொக்கட்டான் சாலை, வள்ளுவர் பிரதான சாலை, ஹாரிங்க்டன் சாலை வழியாக 6வது அவென்யூ, 7வது அவென்யூ.

109வது வட்டம்

கிழக்கு நமச்சிவாயபுரம், மேற்கு நமச்சிவாயபுரம், நெல்சன் மாணிக்கம் சாலை, திருவேங்கடபுரம் 2வது தெரு, திருவள்ளுவர்புரம் 2வது தெரு, சக்தி நகர் 2வது தெரு, அபித் நகர், ராதாகிருஷ்ணன் நகர் ஜங்க்ஷன்.

109அ வட்டம்

அருணாசலம் நகர் 1வது தெரு, எப்5 காவல்நிலையம் அருகில், அண்ணா சிலை, பஜனை கோவில் தெரு, ஸ்ரீராமபுரம், வன்னியர் தெரு, சூளைமேடு பிரதான சாலை.

112வது வட்டம்

சூளைமேடு பிரதான சாலை வழியாக சுபேதார் தோட்டம் சிறிய குடியிருப்பு, முத்துமணி தெரு, மைனர் டிரஸ்ட்புரம் கால்வாய் வழியாக புலியூர் 1வது பிரதான சாலை, டிரஸ்ட்புரம் 2வது குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம் பிரதான சாலை.

112அ வட்டம்

புலியூர் 1வது பிரதான சாலை, டிரஸ்ட்புரம் 6வது தெரு சந்திப்பு, டிரஸ்ட்புரம் 10வது குறுக்குத் தெரு, புலியூர் 2வது பிரதான சாலை, பாரதீஸ்வரர் காலனி 1வது தெரு, முத்து தோட்டம், சிவன் கோயில் தெற்கு தெரு, சிவன் கோயில் தெரு, வெள்ளாளர் தெரு.

மேற்கண்ட நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### மு.சின்னராஜ் தலைமை – எஸ்.மதன்மோகன் முன்னிலையில் சேப்பாக்கம்

# 63 அ வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டம்!

## குடியாத்தம் புவியரசி சிறப்புரை! தயாநிதிமாறன் – மு.க.தமிழரசு – நே.சிற்றரசு பங்கேற்பு!

சென்னை, ஜுன் 20-

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி 63 அ வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் மூன்றாண்டு சாதனை வளிக்கப் பொதுக்கூட்டம் இன்று (20.6.2024) மாலை 6 மணிக்கு மிட்லண்ட் திரையரங்கம் பின்புறத்தில் வட்டச் செயலாளர் மு.சின்னராஜ் தலைமையில் நடைபெறுகிறது

இதில் பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன், தயாநிதிமாறன் எம்.பி., மு.க.தமிழரசு - மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசுகின்றனர்.

குடியாத்தம் புவியரசி சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் கே.மகேஷ், ஆர்.ஜெகதீசன், பி.பிரபாகரன், கே.கோபி, அ.தமீம்அன்சாரி, ஜி-வெங்கடேசன், அலிஃப், எம்.சி.பி. இளையராஜா, எஸ்.கே.ராஜ், மல்லிகா, பாலசந்தர், என்.செல்வம், ஜகாங்கீர், அயூப்கான், வேதாசலம்,

அருண், எஸ்.மதன், பீர் முகமது, ரிஸ்வான் சரப், பிரபு, என்.குமரன், சி.சாது, என்.அன்பழகன், எம்.மணி, அந்தோணிசாமி, எம்.சங்கர், எஸ்.கணபதி, குமார், சுரேஷ், பாலசுப்பிர மணியன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

ஈ.எஸ்.ராஜி, டி.குமார், லட்சுமி பாரதி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருவிடந்தை கிராமத்திற்கு உட்பட்ட கோவளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் Round Table India and Ladies Circle India மற்றும் STS Foundation Public Charitable Trust ஆகிய தொண்டு நிறுவனங்களின் சார்பில் ரூ.123.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய 4 வகுப்பறைகளையும், மாணவர்களுக்கான நவீன சுகாதார வளாகத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ் முன்னிலையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியும் திறந்து வைத்தனர். உடன் நம்ம ஸ்கூல் திட்டத்தின் உறுப்பினர் செயலர் இரா.சுதன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு சார் ஆட்சியர் நாராயண சர்மா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கற்பகம், திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், கோவளம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.சோபனா தங்கம் சுந்தர், Round Table India செயலாளர் திருமதி. சுகந்திஸ்ரீ, நன்கொடையாளர்கள் ராஜகுமார், சுந்தர் மற்றும் அரசு அலுவலர்கள், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.


